
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1162

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

51

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

### செம்மொழிப் போர்!

# கருவியாகத் திகழ்ந்த கலைஞரும் கழகமும்!




**1885**-ஆம் ஆண்டில், பரிதிமாற் கலைஞரால், 'தமிழும் செம்மொழியே' என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டு, அவரது மறைவோடு அக்கோரிக்கையும் மறைந்தது. அவர் மறைந்து 30 ஆண்டுகள் கழித்து, சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் செம்மொழித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1919-1920-ஆம் ஆண்டுகளில், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதுடன், அரசுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் கோரிக்கைகளை வைத்து, அதுவும் அடுத்த கட்டத்துக்கு நகராமல் நின்றது.

இப்படி, நீண்டகாலமாக நிறைவேறாத கோரிக்கையை, கலைஞர் எப்படி நிறைவேற்றிக் காட்டினார் என்பதற்கு முன்னர், தமிழ் செம்மொழி என உலகம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? அதை ஒன்றிய அரசு ஏன் அறிவிக்க வேண்டும்? என்பதும் இந்த நீண்ட போராட்டத்தின் அவசியத்தை உணர்த்தக் கூடியது.

இந்திய அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் தமிழைச் செம்மொழியாக ஏற்கும். சமஸ்கிருதத் துறைகள் எந்தப் பல்கலைக்கழகங்களில் எல்லாம் உள்ளதோ, அங்கெல்லாம் தமிழுக்கு என்று தனித்துறைகள் உருவாகும். இதன் மூலம் தமிழர் கலை, பண்பாடு, தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றின் தொன்மையும் பெருமையும் ஆய்வுபூர்வமாக நிறுவப்படும். தமிழ் செம்மொழித் தகுதி, உலக அளவில் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் பெருமை சேர்ப்பது.

### செம்மொழி உள்ளும் புறமும்

1974-ஆம் ஆண்டில், கலைஞர் அந்த முயற்சியைத் தொடங்கியபோது, ஆட்சி நீடிக்கவில்லை. அதன்பின்னர், 1982-ஆம் ஆண்டில், செம்மொழி கோரிக்கை மனுவை அரசுக்கு அனுப்பிய அறிஞர் மணவை முஸ்தபா, அதற்கு அரசுச் செயலாளர் அனுப்பிய பதிலை, 'செம்மொழி உள்ளும் புறமும்' நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"முதலமைச்சருக்கு எழுதிய நினைவூட்டல் கடிதத்தை, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அன்றைய தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார். அக்கோரிக்கை மனு மீது செயலாளர் எழுதிய குறிப்பில், 'திரு. மணவை முஸ்தபா கூறுவதுபோல தமிழைச் செம்மொழி ஆக்கினால், தமிழ் செத்த மொழிகளின் பட்டியலில் சேர்ந்ததாகிவிடும். எனவே, இக்கோப்பு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார். அந்த விவரம் அப்போது வெளியே வரவில்லை. 2000-ஆம் ஆண்டில், புதுடெல்லியில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் பேசிய தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள், அந்தக் கோப்பினை கையில் வைத்துக்கொண்டு பேசியபோதுதான், எம்.ஜி.ஆர். ஆட்சியின் இப்படியொரு உண்மை முகம் உலகத்துக்கே தெரிந்தது.

1995-ஆம் ஆண்டில், தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போதும், மாநாட்டுக்கு வருகை தரும் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ், செம்மொழி அறிவிப்பு செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழறிஞர்கள் கூடி, அன்றைய முதலமைச்சர் அம்மையாரிடம் வேண்டுகோள் வைத்தனர். ஆனால், அப்படியான அறிவிப்பு மட்டுமல்ல; எந்தப் பயனும் இல்லாமலேயே அந்த மாநாடு முடிந்தது.

செம்மொழி தொடர்பான பயணத்தில் மிக முக்கியமான காலகட்டங்களில் கழகத்தின் முன்னெடுப்பும் கலைஞரின் முன்னெடுப்பும், அது தொடர்ச்சியாக நிறைவேறாமல் போனதற்கு ஆட்சி மாற்றங்களும் காரணமாக இருந்துள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில்,

> "நான் ஒரு கருவி. இந்தக் கருவியைப் பயன்படுத்திக்கொண்டார்கள் தமிழறிஞர்கள்" என செம்மொழி செப்பேடுகள் கடிதத்தில் எழுதினார் கலைஞர்.

1969-ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு, குறிப்பிடத்தக்க கவனத்தை உருவாக்கியது என்றால், 1974-இல் கலைஞர் உருவாக்கிய துறை அதில் பாதி கிணற்றைத் தாண்டியது. 1989-ஆம் ஆண்டில், அந்தக் கோரிக்கை மீண்டும் கலைஞரிடம் வந்தபோது, பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில்தான் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதன் பின்னர், 1996-ஆம் ஆண்டு காலகட்டத்தில் கழக ஆட்சியின்போது, அடுத்த கட்டமான பணிகள் நடைபெற்றன.

### தனி அமைச்சகத்தின் பணி

தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை எனப் புதிதாகத் தனி அமைச்சகத்தை உருவாக்கி, அந்த அமைச்சகத்தின் முதன்மைப்பணி தமிழுக்கு செம்மொழித் தகுதி பெறுவது என வழிகாட்டுதல்களை வழங்கினார் கலைஞர். அமைச்சகம் தொடங்கப்பட்ட ஒரு மாதத்துக்குள்ளாகவே, தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், முன்னாள் துணைவேந்தர்கள், தமிழறிஞர்கள், பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுக்கள், ஆசியவியல் ஆய்வு நிறுவன முன்னாள் இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம் நடத்தப்பட்டு, அவர்களின் ஆலோசனைகளுடன் வரைவறிக்கை தயாரிக்கப்பட்டது.

மறுக்க முடியாத சான்றுகளுடன், வரலாற்றுப் பின்னணியுடன் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, ஒன்றிய அரசின் கல்வித்துறைக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் கருத்துரைக்காகச் செல்கிறது. அந்த ஆய்வறிக்கையை ஆராய்ந்த இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், 'செம்மொழிக்குரிய அனைத்து தகுதிகளும் தமிழுக்கு உள்ளதால், தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம் எனப் பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையை ஒன்றிய அரசு நிறைவேற்றாத நிலையில், மக்கள் மன்றத்தின்வழி அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார் கலைஞர்.

2000-ஆம் ஆண்டில், தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில் டெல்லியில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில், கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்றனர். அமைச்சர் தமிழ்க்குடிமகன் சென்று, அடையவேண்டிய இலக்கு குறித்து, கலைஞரின் கருத்தைப் பதிவு செய்து வந்தார்.

2001-ஆம் ஆண்டு, கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகத் தமிழ் செம்மொழித் தகுதி எட்டப்படும் என்கிற வாக்குறுதியைச் சேர்த்தார் கலைஞர். வாக்குறுதியை நிறைவேற்றும் சூழல் அன்று அமையவில்லை என்றாலும், அதற்கு அழுத்தம் கொடுப்பதை நிறுத்தவில்லை.

2002-ஆம் ஆண்டில், சென்னையில் இந்திய மொழி அறிஞர்களின் மாநாடு, 'தமிழ் ஆட்சிமொழி, தமிழ் செவ்வியல் மொழி, திருக்குறள் தேசிய நூல்' என முப்பெரும் முழக்கத்துடன் நடைபெற்றது. அந்த மாநாட்டைத் தொடங்கிவைத்து நீண்ட உரையாற்றினார் கலைஞர். 2003-ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டக் கழக மாநாட்டிலும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

2003-ஆம் ஆண்டில், தலைநகரில் கழகத்தின் ஆதரவுடன் பட்டினிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. கலைஞரின் வழிகாட்டுதலில் நடைபெற்ற அந்தப் போராட்டத்தின் மூலம் இந்திய அளவில் செம்மொழி கோரிக்கை குறித்த கவனம் பெற்றது. 2004-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையும் செம்மொழித் தகுதி பற்றி பேசியது.

தொடர்ச்சியாகக் கழகம் கொடுத்து வந்த அழுத்தம், அரசியல் பங்கு காரணமாக 2004-ஆம் ஆண்டு, நாடாளுமன்றக் கூட்டுக்கூட்டத்தில் தமிழ் செம்மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

"நான் ஒரு கருவி. இந்தக் கருவியைப் பயன்படுத்திக்கொண்டார்கள் தமிழறிஞர்கள்" என செம்மொழி செப்பேடுகள் கடிதத்தில் எழுதினார் கலைஞர். ஆனால், அந்தக் கருவிக்கு அதற்குப் பின்னரும் வேலை இருந்தது.

...தொடரும்

## தி.மு.க. தேர்தல் அறிக்கையே சிறந்தது!

தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளையும் ஒப்பிட்டு, 'மின்னம்பலம்' இணைய ஊடகத்தில் எழுத்தாளர் ராஜன் குறை எழுதியுள்ள கட்டுரை கவனம் பெற்றுள்ளது.

கட்டுரையில் இருந்து...

"தி.மு.க. வாக்குறுதிகளில், முதல் தலைப்பே மாநில உரிமைகள்தான். மொழிப்போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்த நவீன காட்சிக்கூடம், நூலகம் பொள்ளாச்சியில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, பலரது உள்ளக்கிடக்கை. சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்கள் தொழில்முனைவோராக மாறுவதற்கு மானியத்துடன்கூடிய பிணையில்லா கடன் ஐந்து இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும் என்ற திட்டம் மிகப் பெரிய பாய்ச்சலாகும். அரசு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டியது அவசியம். அந்த வகையில், இன்று மிக விரைவாகப் பெருகிவரும் ஏ.ஐ. திறன் குறித்த கவனம் இந்த அறிக்கை முழுவதிலும் விரவியுள்ளது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக 'இல்லத்தரசி' திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அ.தி.மு.க. வாக்குறுதிகளில் பல நடைமுறைக்குச் சாத்தியமா என்பதைப் பற்றிய ஆய்வு இல்லாமல், தான்தோன்றித்தனமாக அளிக்கப்பட்டவையாகத் தோன்றுகின்றன. இதற்கு மிகச் சிறந்த உதாரணம், மகளிரைப் போலவே ஆண்களுக்கும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் என்ற திட்டமாகும். இது எந்தவித சமூகவியல் புரிதலும் இல்லாமல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்தை அரசு வழங்குவது என்பது மகளிருக்கு வழங்கப்படும் சலுகையைப் பொருளிழக்கச் செய்துவிடும்.

சென்ற தேர்தலில், வாஷிங் மெஷின் என்று சொன்னது எடுபடாததால் இந்த முறை குளிர்பதனப்பெட்டி என்று கூறியிருக்கிறார்கள். எந்தப் பொருள் என்பதை அரசே தீர்மானிப்பதைவிட, தி.மு.க. செய்வதுபோல கூப்பனைக் கொடுத்து, அவர்களே முடிவெடுப்பதுதான் பன்மடங்கு சிறந்தது.

தி.மு.க. தேர்தல் அறிக்கை ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டத்தை முழுமையாக எதிர்க்கிறது. ஆனால், எடப்பாடி பழனிசாமி இந்தத் திட்டத்தை வரவேற்றவர். 'ஒன்றிய - மாநில' உறவு என்றுதான் தி.மு.க. தேர்தல் அறிக்கை கூறுகிறது. பாரதிய ஜனதா கட்சியை மகிழ்விக்கவோ, அதற்கு அஞ்சியோ 'மத்திய அரசு' என்ற சொல்லாட்சியை அ.தி.மு.க. தொடர்கிறது" என்று பல்வேறு ஒப்பீடுகளைச் செய்து, தி.மு.க. தேர்தல் அறிக்கையே சிறந்தது என நிறுவுகிறார் ராஜன் குறை.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!



ஜி.எம்.கிஷோர்குமார்

2018-ஆம் ஆண்டு, மார்ச் 28-ஆம் தேதி, கழகத்தின் செயல்தலைவராக இருந்த இன்றைய தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் எனது பிறந்தநாளை முன்னிட்டு, சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவரை முதன்முதலில் அருகில் பார்த்து, புகைப்படம் எடுத்துக்கொண்டது பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தது.

**- ஜி.எம்.கிஷோர்குமார்,**
**தகவல் தொழில்நுட்ப அணி,**
**மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்,**
**திருவள்ளூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### சட்டமன்ற - நாடாளுமன்றக் குழுக்கள்!

1962-ஆம் ஆண்டு மார்ச் 4 - ஆம் தேதி, பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற கழகத்தின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், சட்டமன்றத் தலைவராக நாவலர், துணைத் தலைவராகக் கலைஞர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அண்ணா நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தினர். தம்பிகளின் வற்புறுத்தலுக்கு முன்னால், அவரது மறுப்பு எடுபடவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900